பக்கங்கள் 18 + 04

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 27 ஞாயிற்றுக்கிழமை 09.06.2024 அதிர்வு 314

## ஐஸ் போதைப்பொருளுடன் சிறை அதிகாரி சிக்கினார்!

ஐஸ் போதைப்பொருளுடன் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் நிவித்திகல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த 04



## அரசியல் கருத்துக் கள நிகழ்வு பெருமளவானோரின் பங்கேற்புடன் ஆரம்பம்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமை தொடர்பில் பொது நிலைப்பாடும், பொது வாக்கெடுப்பும் எனும் மக்கள் மன்றம் பெருமளவானோரின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்றது.

அறிவோர் ஒன்றுகூடும் அரசியல் கருத்துக் கள நிகழ்வு, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தந்தை செல்வா கேட்போர் கூட்டத்தில் இன்று மாலை 3 மணிக்கு ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் சமயத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், கல்விச் சமூகத்தினர், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் பங்கேற்றுள்ளனர்.

(மேலும் படங்கள் 3ஆம் பக்கத்தில்)



### பல்கலைக்கழகப் பட்டத்தைப் பாடையில் கட்டி

# வேலையில்லாப் பட்டதாரிகள் யாழில் மாபெரும் போராட்டம்

### பாரபட்சமின்றி வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என்று வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

**பல்கலைக்கழகப் பட்டத்தைப் பாடையில் கட்டி வேலையில்லாப் பட்டதாரிகள் இன்று யாழ்ப்பாணத்தில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.** 02

















## வேலையில்லாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இன்று காலை கவனவீர்ப்புப் போராட்டம் மேற் கொள்ளப்பட்டது.

"பட்டம் வீட்டில் பட்டதாரிகள் நடு ரோட்டில், ஒரே ஒரு பரீட்சையில் பறந்து போனது பல பரீட்சை எழுதிப் பெற்ற பட்டம், வேண்டும் வேண்டும் நீதி வேண் டும், எமக்கான வாழ்க்கையை நாம் எப்போது வாழ்வது?, படிப்புக்கும் போராட் டம் வேலைக்கும் போராட்டமா?, எல் லோருக்கும் பாரபட்சமின்றி வேலைகளை வழங்க வேண்டும், படித்ததற்குக் கூலித் தொழிலா கடைசி வரைக்கும்?, படித்த வர்கள் இந்த நாட்டின் சாபக்கேடுகளா?,



பல வருட கனவு வெறும் கனவாகவே போய்விடுமா?, படித்தும் பரதேசிகளாகத் திரிவதா?" – என்று பல கோஷங்களைப் போராட்டக்காரர்கள் எழுப்பினர்.

அனைத்து பட்டதாரிகளுக்கும் பாரபட்சமின்றி வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும், தமது கோரிக்கைகளை அரசு விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்றும், இல்லையேல் தொடர்ந்து தாம் பாரிய போராட்டங்களை நடத்துவோம் என்றும் போராட்டக்காரர்கள் தெரிவித் தனர்.

# அரசியல் கருத்துக் கள நிகழ்வு பெருமளவானோரின் பங்கேற்புடன் ஆரம்பம்



(படங்கள்:- ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

# சஜித் அணியுடன் டலஸ் விரைவில் சங்கமம்?



நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, சரித ஹேரத் ஆகியோர் விரைவில் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இணைவார்கள் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இதற்கான பேச்சுகள் வெற்றியளித்துள்ளன எனவும், விரைவில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ரொஷான் ரணசிங்க, தயாசிறி ஜயசேகர ஆகியோரும் சஜித் கூட்டணியில் இணைவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

# மது போதையில் காரைச் செலுத்தி இளைஞரை மோதித் தள்ளிவிட்டு தப்பிச் சென்ற வைத்தியர்

## கல்முனைப் பொலிஸாரால் கைது

(பாறுக் ஷிஹான்)

வீதியால் பயணம் செய்த இளைஞரை எதிரே வந்த வைத்தியர் ஒருவர் செலுத்திச் சென்ற கார் மோதிவிட்டுத் தப்பிச் சென்ற நிலையில் கல்முனை தலைமையகப் பொலிஸாரால் கார் மீட்கப்பட்டுள்ளதுடன் வைத்தியரும் கைதாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பாதிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற இளைஞர் காயமடைந்த நிலையில் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.



விபத்தை ஏற்படுத்திய வெள்ளை நிற கார் தப்பிச் சென்ற நிலையில் அதே வைத்தியசாலை வளாகத்தில் தரித்து நின்ற நிலையில் கல்முனை தலைமையகப் போக்குவரத்து பொலிஸாரால் மீட்கப்பட்டு அதைச் செலுத்திச் சென்ற வைத்தியரும் கைதாகி கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இவ்வாறு கைதான வைத்தியர் எனக் கூறப்படும் நபரிடம் பொலிஸார் வாக்குமூலத்தைப் பெற்றதுடன் விரிவான விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

காரைச் செலுத்திய வைத்தியருக்கு வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லை என்றும், அவர் மது போதையில் காரைச் செலுத்தி வந்தார் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும், காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் இளைஞர் செலுத்திச் சென்ற மோட்டார் சைக்கிளும் சேதமடைந்த நிலையில் கல்முனை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

# காளி கோயில் கும்பாபிஷேகத்துக்கு வந்த பக்தர்களின் நகைகளைத் திருடிய பெண்ணொருவர் மடக்கிப் பிடிப்பு







(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், கன்னாதிட்டி காளி கோயில் கும்பாபிஷேகத்துக்கு வந்த பக்தர்களின் தாலிக்கொடி மற்றும் நகைகளைத் திருடிய பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் பிராந்திய பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின்படி கன்னாதிட்டி காளி கோயில் இந்து இளைஞர்களின் ஒத்துழைப்புடன் மேற்படி பெண் ஒரு மணிநேரத்தில் கைது செய்யப்பட்டார். வவுனியா, பூந்தோட்டத்தில் வசிக்கும் கொழும்பு, வெல்லம்பிட்டியைச் சேரந்த 27 வயதான பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பெண்ணைக் கைது செய்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரித்தபோது பெண்ணின் உள்ளாடைக்குள் இருந்து திருடப்பட்ட தாலிக்கொடி மற்றும் நகைகள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பெண் மேலதிக விசாரணைக்காக யாழ். பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதலாம் பக்கத் தொடர்ச்சி

**ஐஸ்...**

தகவலின் அடிப்படையில், இரத்தினபுரி – கலவானை பிரதான வீதியில் உள்ள கெடனிவத்த பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் மோட்டார் சைக்கிளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் பணிபுரியும் சிறைச்சாலை அதிகாரி ஆவார்.

அவரிடமிருந்து 15 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் நீண்ட காலமாகப் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வருபவர் என்று பொலிஸ் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.



# நல்லிணக்க ஒருங்கிணைப்பாளராக சர்வமதத் தலைவர்கள் நியமனம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவால்சர்வமததலைவர்களானவண.கலாநிதி சாஸ்த்ரபதி கலகம தம்மரன்சி நாயக தேரர், சிவஸ்ரீ கலாநிதி ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, அல்-ஹாஜ் அஷ்-ஸெய்யித் அல்-ஹாபிழ் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரி, அருட்தந்தை கலாநிதி நிஷான் குரே பாதர் ஆகியோர் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஒருங்கிணைப்பாளர்களாக நேற்று முன்தினம் (07) நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடித்தை நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ வழங்கி வைத்தார்.

நாட்டின் தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வை வலுப்படுத்தல், சகல இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் சகவாழ்வையும் கட்டியெழுப்புதல் ஆகியவற்றை நோக்கி அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சர்வமத நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் மேம்படுத்தலுக்காக இந்த அமைச்சுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள செயற்பணிகளை ஒருங்கிணைத்தல் இந்தப் பதவியின் பிரதான இலக்கு மற்றும் செயற்பணிகளாகும் என்றும் நியமனக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நெருக்கடியிலும் செழுமை

இலங்கை உட்பட தெற்காசிய நாடுகள் பலவற்றில், ஊட்டச்சத்துகள் நிறைந்த உணவுகள், குறிப்பாக பழங்கள், காய்கறிகள் மற்றும் விலங்குகளின் இறைச்சி சார்ந்த உணவுகள், கலோரி அடர்வு உணவுகள் போன்றவை ஒப்பீட்டளவில் விலை உயர்ந்தனவாக இருக்கின்றன.

அதற்குப் பிரதான காரணம் நீண்ட காலமாக நாட்டின் விவசாயக் கொள்கைகள் மற்றும் நுகர்வோருக்கான மானிய உதவிகள் போன்றவை இத்தகைய ஊட்டச்சத்துகள் நிறைந்த உணவுகளுக்குப் பதிலாகப் பிரதான உணவு உற்பத்திப் பயிர்களுக்குச் சாதகமாக இருப்பதுதான்.

இந்தப் பின்னடைவு நிலைமையைச் சமாளித்து, சூழ்நிலையைச் நேர்சீராக்குவதற்கு சத்தான - போஷாக்கான - உணவு வகைகளின் உற்பத்திக்கான விவசாயக் கொள்கைகளை மீண்டும் உருவாக்கி, போக்குவரத்து, உள்கட்டமைப்பு மற்றும் தளவாடங்களில் முதலீட்டை அதிகரிப்பதன் மூலம் சத்தான உணவு வகைகள் கிடைக்கும் தன்மையை அதிகரிப்பது மற்றும் விலைகளைக் குறைப்பது உள்ளிட்ட பல நடவடிக்கைகளை நாடுகள் எடுக்க வேண்டும்.

- சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் (IFPRI) ‘உலகளாவிய உணவுக் கொள்கை அறிக்கை 2024: ஆரோக்கியமான உணவுகள் மற்றும் ஊட்டச்சத்துக்கான உணவு அமைப்புகள்’ என்ற தலைப்பில் சமீபத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அந்த அறிக்கையில் இந்தச் சவால்கள் விவாதிக்கப்பட்டுள்ளன.

நாடுகளின் கொள்கைகள், ஒழுங்குமுறைகள், கலாச்சார நடைமுறைகள், பொருளாதார மாதிரிகள் மற்றும் விவசாயம் மற்றும் உணவு தொடர்பான முடிவுகள் எவ்வாறு உணவுப் பழக்க வழக்கங்களை நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் பாதித்துள்ளன மற்றும் ஆரோக்கியம் தொடர்பான விடயங்களை எவ்வாறு பாதித்தன என்பதிந்த அறிக்கை விரிவாக ஆய்வு செய்துள்ளது.

தெற்காசியாவின் அதிக மக்கள் தொகை கொண்ட ஆறு நாடுகளில் - அதாவது ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் - ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் தொற்றாத நோய்கள் பரவுவதை அறிக்கை ஆய்வு செய்து விவரித்துள்ளது.

மற்றைய ஐந்து நாடுகளையும் விட பல விடயங்களில் இலங்கை மேம்பட்டிருப்பது இந்த ஆய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில் இலங்கையில் ஊட்டச்சத்தின்மையின் பாதிப்பு மக்கள்தொகையின் அடிப்படையில் 5.3 வீதமாகப் பதிவாகியுள்ளது. இதுவே இந்த ஆறு நாடுகளிலும் மிகக் குறைவானதாகும்.

ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் வளர்ச்சி குன்றியதன்மை 2012 இல் இலங்கையில் 14.6 வீதமாக இருந்தது. இதுவும் இந்த ஆறு நாடுகளில் மிகக் குறைவானதாகும். மேலும் 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட நாடுகளின் நிலைமைகளை ஒப்பிடுகையில், மற்ற ஐந்து நாடுகளின் பரவலானது. 38.7 வீதத்துக்கு மேல் இருந்ததும் அவதானிக்கப்பட்டுள்ளது.

வயது வந்தவர்களில் அதிகரித்த இரத்த அழுத்தத்தின் பாதிப்பு இலங்கையில்தான் மிகக் குறைவாக இருந்தது. இது 2011 மற்றும் 2015 இல் முறையே 21.9 வீதம் மற்றும் 22.3 வீதமாகப் பதிவுசெய்யப்பட்டது.

வயது வந்தவர்களில் நீரிழிவு நோயின் பரவலானது பிராந்தியத்தில் இலங்கையில்தான் மிகக் குறைவாகவப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது 2011 இல் 6.9 வீதமாகவும் 2014 இல் 7.4 வீதமாகவும் இருந்தது.

மேலும், 2006 மற்றும் 2016 ஆகிய இரண்டிலும் செய்யப்பட்ட பதிவுகளின்படி பெரியவர்கள் அதிக எடையுடன் இருக்கும் விடயத்தில் ஆறு நாடுகளில் இலங்கை இரண்டாவது மிக உயர்ந்த இடத்தில் இருப்பதாகத் தரவு காட்டுகிறது.

2021-2022 காலகட்டத்தில் போஷாக்கான உணவு வகைகளை உட்கொண்டோர் வீதத்தில் மற்றைய ஐந்து நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் நிலைமை மேம்பட்டது என்கிறது அந்த ஆய்வின் புள்ளி விவரங்கள்.

எங்கள் பிராந்தியத்துடன் ஒப்பிடும்போது, வறுமையிலும் செம்மையாக - நெருக்கடியிலும் செழுமையாக - இலங்கை மக்கள் வாழ்கின்றனர் என்பதையே இந்த சர்வதேச தர ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது என்று திருப்திப்படலாம்.



# மண்முனை வடக்கு பிரதேசத்தில் மரம் நடுகைத் திட்டம் முன்னெடுப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலக சுற்றாடல் தினத்தைச் சிறப்பிக்கும் முகமாக "நிலம் மறுசீரமைப்பு வறட்சியை தாங்கும் தன்மை" எனும் தொனிப்பொருளில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மரம் நடுகை திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மண்முன் வடக்கு பிரதேச செயலகம், மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்களம், சமூர்த்தி திணைக் களம் என்பன இணைந்து ஒழுங்கு செய்திருந்த உலக சுற்றாடல் தினம் பிரதேச செயலாளர் வ.வாசுதேவன் தலைமையில் இருதயபுரம் கிழக்கு மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள வளாகத்தில் இட்பெற்றது. இதன் போது பயன்தரும் மரங்கள் நடப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, சிவில் பொலிஸ் ஒருங்கிணைப்பாளர், பொலிஸ் உத்தி யோஸ்தர்கள், கிராம நிர்வாக உத்தி யோகஸ்தர், கிராம அபிவிருத்தி உத்தியோஸ்தர், கிராம சேவை உத்தி யோஸ்தர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.





# ரஷ்ய நாட்டின் மாநாட்டில் பங்கேற்கும் இலங்கை கல்வி இராஜாங்க அமைச்சர்





(பொகவந்தலாவ)

ரஷ்ய நாட்டின் கசான் நகரில், எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை எதிர்காலத்தை வடிவமைத்தல் என்ற தொனிப் பொருளில் மாநாடு ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில், ஆசிய நாடுகள், காமன்வெல்த் சுதந்திர இராச்சியத்தின் கீழ் வரும் நாடுகள் மற்றும், இலத்தீன் அமெரிக்க நாடுகளின் கல்வி அமைச்சர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் இலங்கைப் பிரதிநிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவ அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

# கொழும்புத் தமிழ்ச் சங்க இலக்கியக்களம்




கொழும்புத் தமிழ்ச் சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இலக்கியக் களம் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மாலை கல்வி அமைச்சின் ஓய்வு நிலை மேலதிகச் செயலாளர் உடுவை எஸ். தில்லை நடராசா தலைமையில் நடைபெற்றது

நிகழ்வில் பேராசிரியர் ஏ. எப். எம். அஷ்ரப் "தற்காலத் தமிழ் இலக்கிய விமர்சனப் போக்கு" என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

அவருக்கான தமிழ்ச் சங்கக் கௌரவ நூலை இலக்கியக் குழு உறுப்பினர் சட்டத்தரணி தட்பரன், கல்விக் குழுச் செயலாளர் இராஜரட்ணம் இணைந்து அன்பளிப்பு செய்தனர்.



# தமிழ் புத்தகக் கண்காட்சியும் ஆய்வரங்கும் கொழும்பில்

இலங்கை தமிழ் மொழிச் சூழலில், வாசிப்பை ஊக்கப்படுத்துவதற்காகவும், புத்தகப் பண்பாட்டை வளர்ப்பதற்காகவும், நீண்டகால செயற்றிட்டத்தின் தொடக்க நிகழ்வு நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர்களையும் இளம் தலைமுறையையும் முதன்மை பிரிவினராகக் கொண்ட வாசிப்பு, எழுத்து, புத்தக பரவலாக்க தொண்டுச் செயற்பாட்டைத் தொடங்கி வைக்கும் வகையில் , எதிர்வரும் 21, 22, 23 ஆம் திகதிகளில் வெள்ளவத்தை சைவ மகளிர் மண்டபத்தில் மூன்று தினங்கள் இடம் பெறவுள்ளது என்று செயற்றிட்டத்தின் சர்வதேச இணைப்பாளர் எம். பௌசர் தெரிவித்துள்ளார்.

இந்த முக்கிய நிகழ்வில், புத்தகக் கண்காட்சியும், ஆய்வரங்கும் இடம் பெறவுள்ளன.

புத்தக கண்காட்சி, 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை தொடங்கி, 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு வரை இடம்பெறவுள்ளது. இந்தப் புத்தகக் கண்காட்சியில் தமிழகப் பதிப்பகங்களான பாரதி புத்தகாலயம், நியூசெஞ்சரி புக் ஹவ்ஸ், காலச்சுவடு, டிஸ்கவரி, எதிர், நன்னூல், சிக் சென்த் பதிப்பகங்கள் உட்பட, தஞ்சாவூர் பல்கலைக் கழகமும் , லண்டன் சமூகம் இயல் பதிப்பகமும் கலந்து கொள்கின்றன.

இலங்கையிலுள்ள முன்னணிப் பதிப்பகங்களும், புத்தக நிலையங்களின் விற்பனைக் கூடங்களும் இடம் பெறவுள்ளன. தமிழ், ஆங்கில சிறுவர் பதிப்பகங்களும் கலந்து கொள்ளவுள்ளன.புத்தக கண்காட்சி அரங்குக்கு மலையக மாணவ சமுதாயத்தை உருவாக்கப் பங்களித்த வி.ரி. தர்மலிங்கத்தின் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

ஈழத்து தமிழ் மொழி எழுத்தாளர்களுக்கான தனி அரங்கும் விசேடமாக அமைக்கப்படவுள்ளது. இந்திய நூல்களைக் குறைந்த நாணய மாற்று விலையில் இங்கு பெற்றுக் கொள்ள முடியும். இந்த வாய்ப்பை இலங்கை மாணவர்கள், எழுத்தாளர்கள், வாசிப்பாளர்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும். பாடசாலை, பல்கலைக்கழக நூலகங்கள் தொடக்கம், உள்ளூராட்சி நூலகங்கள் தமக்கான நூல்களை பெற்றுக் கொள்ளவும் இந்த நிகழ்வு ஒரு அரிய வாய்ப்பாகும்.

ஆய்வரங்கு நிகழ்வில், தமிழகத்தில் இருந்து பேச்சாளர், கதைசொல்லி பவா செல்லத்துரை, எழுத்தாளர் பெருமாள் முருகன், கர்நாடக இசைக் கலைஞர் டி.எம். கிருஸ்ணா, உலகறிந்த தமிழாய்வாளர் முனைவர் இரா வேங்கடாசலபதி, பதிப்பாளர் கண்ணன் சுந்தரம் உட்பட தமிழகத்தில் இருந்து பலர் வருகை தரவுள்ளனர்.

இலங்கை பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மூத்த கல்வியலாளர்களுடன், இளம் பல்கலைக்கழக ஆசிரியர்களும், ஆய்வாளர்களும், எழுத்தாளர்களும் தமது ஆய்வுகளையும் கருத்துக்களையும் முன்வைக்க வுள்ளனர். பங்குபற்றுனர்களுடனான விரிவான கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் அங்குரார்ப்பண நிகழ்வுக்கு பேராசிரியர்சி.மௌனகுருதலைமைவகிக்கவுள்ளார். இதில் மறைந்த ஓவியர் அ. இராசையாவின் அரும்பெரும் நூல் உட்பட, பல நூல்களை இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு இலவசமாக வழங்கி வைக்கப்படவுள்ளன.

மற்றுமொரு நிகழ்வாக, கவிஞர் மறைந்த மஹாகவி அரங்கில், லண்டனில் உள்ள சமூக இயல் பதிப்பக வெளியீடுகளான பேராசிரியரும் எழுத்தாளருமான எம், ஏ. நுஃமானின் இரு நூல்கள் வெளியீட்டு வைக்கப்படவுள்ளன.

இந்த நூல்கள் குறித்து பேராதனை பல்கலைக்கழக ஆசிரியர் சுதர்சன் செல்லத்துரை, இராஜதந்திரி அலியார் அசீஸ், பேராசிரியர்களான சி. சிவசேகரம், சித்திலேகா ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

மறைந்த பேராசிரியர் சு.வித்தியானந்தன், மறைந்த அறிஞர் ஏ,எம்,ஏ, அசீஸ் ஆகியோரின் அரங்குகளும் உள்ளன. இந்த திட்டத்தை இங்கிலாந்தில் உள்ள மானுடம் அமைப்பு இலங்கையிலுள்ள மதகு அமைப்புடன் இணைந்து முன்னெடுக்கிறது.



# அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் 100 மணித்தியால சிங்கள பாடநெறிகள்

(எம்.எப்.நவாஸ்)

பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அரச மொழிகள் திணைக்களத்தால் ஆரம்பதர அரச உத்தியோகத்தர்களுக்கான 100 மணித்தியால சிங்கள பாடநெறி அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரி.எம்.இர்பானின் வழிகாட்டலில் உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி கு.நஹீஜா முஷாபிர் தலைமையில் விடயத்துக்கு பொறுப்பான தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எ ம்.எம். நிஸானின் நெறிப்படுத்தலில் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



மாவட்ட தேசிய மொழிகள் அபிவிருத்தி இணைப்பாளர் கு.பிரதீஸ்கரன், நிர்வாக உத்தியோகத்தர் கே.பி. சலீம், கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எல்.ஜஃபர், நிர்வாகப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.ஏ.சி. றியானா, திட்டமிடல் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஜெயந்தி பரமநிதி, விடயத்துக்கு பொறுப்பான ஆசிரியர் பாசில் மற்றும் பிரதேச செயலக, வைத்தியசாலை மற்றும் பிரதேச சபை போன்ற நிறுவனங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஆரம்பதர உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் இது ஆரம்பிக்கப்பட்டது.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புத்தளம் கிளைகள் புனரமைப்பு




(கே.எ.ஹமீட்)

புத்தளம் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிளைகள் புணரமைப்பு சம்மந்தமாக கலந்துரையாடல் கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். தௌபீக் பங்குபற்றுதலுடன் வெள்ளிக்கிழமை (07) நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட மத்திய குழு, கிளைகள் புனரமைப்பு, கட்சிப் பணிகள் மற்றும் எதிர்கால செயற்றிட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

இந்தச் சந்திப்பின்போது முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நியாஸ், உட்பட உயர்பீட உறுப்பினர்கள், நகர மற்றும் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.



Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555



# மட்டு. பொது நூலகத்தின் கட்டுமான பணியை விரைவுபடுத்த கலந்தாய்வு

மட்டக்களப்பு பொது நூலகத்தின் கட்டுமான பணிகளை விரைவுபடுத்தி நிறைவு செய்து மக்கள் பாவனைக்கு கையளிப்பது தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் இராஜாங்க அமைச்சர் சி. சந்திரகாந்தன் தலைமையிலான உயர்மட்ட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு பொது நூலகத்தின் கட்டுமான பணிகளை விரைவுபடுத்தி நிறைவு செய்வதற்கான மேலதிக நிதி ஒதுக்கீடு மற்றும் அமைச்சரவையில் விசேட அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்தல், வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் போது ஏற்படும் இடையூறுகளை கையாள்வதற்கான பொறிமுறைமைகள் போன்றன தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

இதன் போது குறித்த அமைச்சரவை பத்திரம். மற்றும் விசேட நிதி ஒதுக்கீடு தொடர்பாக பிரதமர் தினேஷ் குணவர்த்தனவால் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தனின் வேண்டுகோளுக்கு அமைவாக, குறித்த நூலகத்தின் பணிகளை முழுமையாக முடிவுறுத்தி மக்கள் பாவனைக்கு கையளிப்பதற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பிலுமான முனைப்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பார் என்று பிரதமர் இதன்போது குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர, கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் இணைப்பு செயலாளர் மாணிக்கவாசகர் தயாபரன், மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் எந்திரி சிவலிங்கம், தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், தற்போதைய கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளருமான பூபாலபிள்ளை பிரசாந்தன் உட்பட கட்டட திணைக்கள உயர் அதிகாரிகள், துறைசார் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் தூரநோக்கு சிந்தனைக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தின் அடையாளச் சின்னமாகவும், ஆசியாவின் பிரமாண்டங்களுள் ஒன்றாகவும் மிளிரவிருக்கும் மட்டக்களப்பு பொது நூலகத்தின் கட்டுமான பணிகள் கடந்த காலங்களில் நிலவிய கசப்பான அரசியல் பழிவாங்கல்கள், மற்றும் அரசியல் ரீதியான குரோத செயற்பாடுகள் காரணமாகவும் தொடர் இழுபறி நிலைக்கு தள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# மன்னார் கோந்தைப்பிட்டி பகுதியில் கண்டல் தாவரங்கள் இன்று நடுகை

(மன்னார்)

சர்வதேச சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு 'கடற்கரையோரங்களை பாதுகாப்போம்' எனும் தொனிப் பொருளில் மன்னார் கோந்தைபிட்டி பகுதியில் காணப்படும் கரையோரப் பகுதிகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை (09) காலை கண்டல் தாவரங்கள் நடுகை செய்யப்பட்டன.

மன்னார் உப்புக்குளம் அல் -அஸ்ஹர் மீனவ கூட்டுறவு சங்கத்தின் ஏற்பாட்டில், மன்னார் கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளரும் வட மாகாண கடற்றொழில் இணையத்தின் ஊடகப் பேச்சாளருமான வே.ஆ.ஆலம் தலைமையில் பொது மக்களுடன் இணைந்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் மன்னார் நகர் பிரதேச செயலாளர் ஆ.பிரதீப் மற்றும் கடற்றொழில் திணைக்கள சிரேஷ்ட அதிகாரி பவனிதி ஆகியோர் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு மரம் நடுகையை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் உப்புக்குளம் பள்ளிவாசல் இமாம், மன்னார் பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், மீனவர்கள், இளைஞர்கள், சிறுவர்கள், மாதர் அபிவிருத்தி ஒன்றிய பிரதிநிதிகள், சமூர்த்தி உத்தியோகஸ்தர்கள் கலந்து கொண்டு கண்டல் தாவரங்களை நட்டு வைத்தனர்.

# உலகப் பெருங்கடல் தினத்தை முன்னிட்டு மட்டக்குளி காக்காதீவு கடற்கரை துப்புரவு!





உலக பெருங்கடல் தினத்தை முன்னிட்டு மட்டக்குளி காக்கா தீவு கடற்கரையைச் சுத்தப்படுத்தும் பணி நேற்று (08) கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் வழிகாட்டலில் இடம் பெற்றது.

கடலின் மதிப்பு மற்றும் கடலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் உலகப் பெருங்கடல் தினம் கொண்டாடப்படுகிறது.

கடலின் மதிப்பு மற்றும் கடலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் உலகப் பெருங்கடல் தினம் கொண்டாடப்படுகிறது.

இவ்வருடம் உலக பெருங்கடல் தினத்தை முன்னிட்டு கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையானது விசேட கடற்கரையை சுத்தப்படுத்தும் நிகழ்ச்சி மற்றும் பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது.

1982 ஜுன் 8 இல் ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் மற்றும் அபிவிருத்திக்கான மாநாட்டில் கனடாவின் பெருங்கடல் நிறுவனம் கடல்களுக்கான சர்வதேச தினத்தை முன்மொழிந்தது.

உலக பெருங்கடல் தினத்தை கொண்டாடுவதற்கு பல நோக்கங்களை அடையாளம் காணலாம். கடலில் மனித செயல்களின் தாக்கம், உலகளவில் கடலுக்கான குடிமக்களின் இயக்கங்களை உருவாக்குதல் மற்றும் உலக மக்களை அணிதிரட்டுதல் மற்றும் ஒன்றிணைத்தல் ஆகியவற்றைப் பற்றி மக்களுக்குக் கற்பிப்பது முக்கியம்.

இந்த ஆண்டு உலகப் பெருங்கடல் தினத்தைக் கொண்டாடும் வகையில், கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை 14 கடலோர மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கடற்கரை மற்றும் கடற்கரை சுத்தம் செய்யும் நிகழ்ச்சிகள் மற்றும் சதுப்புநில மரம் நடும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது.

இவ்வருடம் உலகப் பெருங்கடல் தினத்தைக் கொண்டாடும் வகையில், கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் வழிகாட்டுதலின் கீழ் அம்பாந்தோட்டை பிரதேசத்தில் சதுப்புநில மரம் நடும் நிகழ்வுகள், திருகோணமலை கரையோரப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட பல இடங்களில் கடற்கரை மற்றும் கடற்பரப்பு சுத்தம் செய்தல் மற்றும் மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை கடல்சார் சுற்றாடல் பாதுகாபு அதிகார சபை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் முப்படையினர், பொலிஸார், அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் அசேல பி.ராகவ, கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் பொது முகாமையாளர் ஜகத் குணசேகர,சமுத்திர தூய்மைப்படுத்தல் நிதிய தலைவர் ஜெரோம் பெர்னாண்டோ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





# மகிளூர் மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணம்




**( வி.ரி. சகாதேவராஜா)**

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பெரண்டினா நிறுவனத்தின் களுவாஞ்சிக்குடி கிளையின் ஏற்பாட்டில் மகிளூர் கிழக்கு நாகதேவி பாலர் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்குப் பெரண்டினா நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய முகாமையாளர் எஸ்.பிரதிலிபன் மற்றும் கிளை முகாமையாளர், ஊழியர்கள், பாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

விளையாட்டு உகரணங்களைப் பெற்றுக் கொண்ட குழந்தைகள் குதூகலமாக காணப்பட்டார்கள்.

பெற்றோர்கள் பெரண்டினா நிறுவனத்துக்கு நன்றி தெரிவித்தனர்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# திருகோணமலையில் இடம்பெற்றுள்ள தொழில் அமைச்சின் நடமாடும் சேவை

(ஹஸ்பர்)

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் திருகோணமலைக்கு ஸ்மார்ட் எதிர்காலம் எனும் தொனிப்பொருளில் மக்கள் நடமாடும் சேவையானது கடந்த இருதினங்கள் திருகோணமலையில் அமைந்துள்ள மக்ஹெய்ஸர் மைதானத்தில் இடம்பெற்றது.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவால் தேசிய கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டு திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சியின் வரவேற்புரையை தொடர்ந்து நிகழ்வு ஆரம்பமானது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஷ்பகுமார அனுசரணையுடன், அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களால் வழங்கப்படும் அனைத்து சேவைகளையும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் பயனாளிகளின் வதிவிட பிரதேசங்களில் இலகுவாக வழங்க இந்த வேலைத் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நாட்டில் தொழிலாளர் சந்தையை புனரமைப்பதே இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துவதன் முக்கிய நோக்கமாகும்.

பாதுகாப்பான முறையில் வெளிநாடு செல்லல் மற்றும் மனிதக் கடத்தல் தொடர்பாக திருகோணமலை மாவட்டத்தின் அரச அதிகாரிகள், சட்டத்தரணிகள் மற்றும் அனுமதிப் பத்திரம் பெற்ற முகவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வும் இதன்போது நடைபெற்றது.

இந்நடமாடும் சேவையில் தொழிலாளர் திணைக்களம், ஊழியர் நம்பிக்கை நிதியம்,வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்கள், சிறு தொழில் அபிவிருத்திபிரிவு, தொழிற் பயிற்சி அதிகாரசபை உட்பட பல நிறுவனங்கள் தமது சேவைகளை வழங்கியிருந்தன.

இந்த நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான ஏ.எல்.எம். அதாவுல்லா, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, கிழக்கு மாகாண முன்னாள் மாகாண அமைச்சர் ஆரியவதி கலப்பத்தி, அரச உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அதிகாரிகள், முக்கியஸ்தர்கள், அரச மற்றும் அரசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் , வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின் பிரதிநிதிகள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் கலந்துகொண்டனர்.













# தொண்டர் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கி வைப்பு

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பின்தங்கிய தமிழ்க் கிராமங்களில் அமைந்துள்ள பல பாடசாலைகளில் கணினி, கணிதம், அறிவியல் மற்றும் ஆங்கிலம் கற்பிக்க ஆசிரியர் இல்லாத சூழல் நிலவுகின்றது.

அந்தவகையில் வெருகல் கோட்டத்தில் உள்ள இலங்கைத் துறைமுகத் துவாரம் இந்துக் கல்லூரி, திருவள்ளுவர் வித்தியாலயம் மற்றும் துவாரகா வித்தியாலயம், மூதூர் வலயத்தில் உள்ள கங்குவேலி அகத்தியர் வித்தியாலயம், இலிங்கபுரம் தமிழ் வித்தியாலயம் மற்றும் ஆதியம்மன் கேணி தமிழ் வித்தியாலயம், மொறவெவ கோட்டத்தில் உள்ள அவ்வை நகர் தமிழ் வித்தியாலயம், குச்சவெளிக் கோட்டத்தில் உள்ள திரியாய்த் தமிழ் மகாவித்தியாலயம் மற்றும் விவேகானந்தா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு கணிதம், கணினி மற்றும் அறிவியல் கற்பிக்க ஆசிரியர் இல்லை.

தமிழ் மாணவர்களது கல்வி பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகக் கல்வித் துறையின் வேண்டுகோளுக்கு அமைய திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் இந்தப் பாடசாலைகளுக்குத் தொண்டர் ஆசிரியர்களை நியமித்து மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கி வருகின்றது.

இவர்களுக்கான இரு மாதக் மாதக் கொடுப்பனவுகள் நேற்று (08) வழங்கப்பட்டது. திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் கதிர்வேலு சண்முகம் குகதாசன், செயலாளர் கணபதிப்பிள்ளை சிவானந்தன், பொருளாளர் இராசரத்தினம் கோகுலதாசன் ஆகியோர் இந்தக் கொடுப்பனவுகளை வழங்கினர்.



# சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு கடற்கரை சுத்தப்படுத்தி மரநடுகை!

உலக சுற்று சூழல் தினத்தை முன்னிட்டு கடற்கரையைச் சுத்தபடுத்தி மரம் நடும் நிகழ்வு சுழிபுரம் மேற்கில் முன்னெடுக்கபட்டது.

வலி. மேற்கு பிரதேச செயலகத்தால் சுழிபுரம் கலைமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் பசுமைப் புரட்சித் திட்டத்தின் கீழ் மரக் கன்றுகள் நட்டு வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து சுழிபுரம் மேற்கு புளியந்துறை கடற்கரையில் தூய்மைப்படுத்தல் பணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

இதன் பொழுது சங்கானை பிரதேச செயலர் கவிதா உதயகுமார், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினர், குகன் குல சங்கத்தினர், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# இன்று பிரதமராக பதவியேற்கிறார் மோடி; 7 நாடுகளின் தலைவர்கள் டில்லி விஜயம்



டில்லியில் இன்று நடைபெறும் மோடி பதவியேற்பு விழாவில் இந்தியாவின் 7 அண்டை நாட்டு தலைவர்கள் பங்கேற்க உள்ளனர்.

மக்களவை தேர்தலுக்குப் பின்னர் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜன நாயகக் கூட்டணி அரசு இன்று பொறுப் பேற்கிறது. மூன்றாவது முறையாக நரேந்திர மோடி பிரதமர் பதவியேற் கிறார். இதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

இந்த நிலையில், மோடி பதவி யேற்பு விழாவில் பங்கேற்க பங்களா தேஷ், நேபாளம், பூடான், இலங்கை, மாலைதீவு, மொரீஷியஸ், சீசெல்ஸ் ஆகிய இந்தியாவின் அண்டை நாட்டு தலைவர்கள் டில்லி சென்றுள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு மோடி யின் பதவியேற்பு விழாவில் பங்கேற்ற பாகிஸ்தான் மற்றும் மியான்மர் ஆகிய இரு நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப் பட்டது. ஆனால், இந்த முறை அந்த 2 நாட்டு தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

கடந்த 2014 ஆம் ஆண்டு மோடி பிரதமர் பதவியேற்ற போது, பாகிஸ்தா னில் அப்போது பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப் பங்கேற்றார். அப் போது சார்க் நாட்டு தலைவர்கள் அனைவருக்கும் இந்தியா அழைப்பு விடுத்திருந்தது. அப்போது மியான்மர் நாட்டு தலைவரும் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

ஆப்கானிஸ்தானைப் பொறுத்த வரை, தலிபான்களின் நிர்வாகத்தை இந்தியா இன்னும் அங்கீகரிக்க வில்லை. எனவே, அந்த கேள்வி இங்கு எழவில்லை. எல்லை தாண்டிய தீவிர வாத தாக்குதல் தொடர்ந்து வந்ததால், கடந்த 2019 ஆம் ஆண்டு பதவியேற்பு விழாவுக்கு பாகிஸ்தானுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. மேலும், 3 ஆவது முறையாக பிரதமர் பதவியேற்க உள்ள நரேந்திர மோடிக்கு இதுவரை பாகிஸ் தானிடம் இருந்து வாழ்த்து செய்தி கூட வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# நாம் தமிழர் கட்சி பெற்ற வாக்குகள் பெரும் ஜனநாயக மறுமலர்ச்சியாகும்

## கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவிப்பு



"சின்னம் பறிப்பு, அதிகார முறை கேடு, அரசியல் நெருக்கடி எனப் பல அடக்கு முறைகளைத் தாண்டியும், சாதி, மதம், மது, பணம் எனப் புரையோடிப் போன சமூகத் தீங்குகளைக் கடந் தும் நாம் தமிழர் கட்சி பெற்றிருக்கும் வாக்குகளென்பது பெரும் ஜனநாயக மறுமலர்ச்சியாகும். எட்டே ஆண்டு களில் மாநிலக் கட்சியாகப் பரிணமித் திருப்பது தமிழின அரசியல் வரலாற்றில் ஒரு புத்தெழுச்சிப் பாய்ச்சல்."

– இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில்,

"அண்மையில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் தனித்துப் போட்டி யிட்ட நாம் தமிழர் கட்சி, 8.2 வீத வாக்கு களைப் பெற்றிருக்கிறது. இத்தேர்தலில் வெற்றி எனும் இலக்கை அடையா விட்டாலும், கணிசமான வாக்குகளைப் பெற்று, மாநிலக் கட்சியாக அங்கீ காரம் பெற்றிருப்பது பெரும் மகிழ்வைத் தருகிறது.

'தமிழ்த் தேசியம்' எனும் உயரிய தத் துவ முழக்கத்தை எம் முன்னோர்களும், மூத்தோர்களும் பன்னெடுங்காலத் திற்கு முன்பே தூக்கிச் சுமந்தபோதும், அக்கருத்தியல் முழக்கம் வெகுமக்கள் வடிவம் பெறாமலேயே இருந்தது. அந்தப் போதாமையையும், குறைபாட்டையும் முற்றிலும் போக்கி, தமிழ்த் தேசியத்தை வெகுமக்கள் அரசியலாக்கி, தேர்தலிலே களம் கண்டது நாம் தமிழர் கட்சி.

2016 ஆம் ஆண்டு முதன்முத லில் தேர்தலில் போட்டியிட்ட நாம் தமி ழர் கட்சி, எட்டே ஆண்டுகளில் மாநிலக் கட்சியாகப் பரிணமித்திருப்பது தமிழின அரசியல் வரலாற்றில் ஒரு புத்தெழுச்சிப் பாய்ச்சல். சின்னம் பறிப்பு, அதிகார முறைகேடு, அரசியல் நெருக்கடி எனப் பல அடக்கு முறைகளைத் தாண்டியும், சாதி, மதம், மது, பணம் எனப் புரை யோடிப்போன சமூகத் தீங்குகளைக் கடந்தும் நாம் தமிழர் கட்சி பெற்றிருக்கும் வாக்குகளென்பது பெரும் ஜனநாயக மறுமலர்ச்சியாகும்.

இந்தத் தேர்தலில் பெற்ற மாநிலக் கட்சி அங்கீகாரத்தை ஊக்கமாகக் கொண்டு, 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர் தலில் மாநிலத்தின் ஆட்சி அதிகாரத் தைப் பிடிக்க உறுதியேற்கிறோம்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 35,60,485 மதிப்புமிக்க வாக்குகளைத் தந்து, நாம் தமிழர் கட்சியைப் பெரும் அரசியல் ஆற்றலாக உருவெடுக்கச் செய்த தாய்த்தமிழ்ச் சொந்தங்கள், போற்றுதற்குரிய பெருமக்கள், வேட் பாளர்களாகக் களத்தில் நின்ற எம் உடன்பிறந்தார்கள், எல்லாவுமாகத் துணைநின்ற அன்பிற்கினிய உறவுகள், உயிரைக் கொடுத்து உழைத்த உயிருக் கினிய தம்பி, தங்கைகள் என அனைவ ருக்கும் என்னுடைய புரட்சிகரமான வாழ்த்துகளையும், உளப்பூர்வ மான அன்பினையும் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று குறிப்பிட்டுள் ளார்.

# பா.ஜ.க. அரசை நமது முழக்கங்களால் செயல்பட வைக்க வேண்டியது கடமை

## தி.மு.க. எம்.பி.க்களுக்கு ஸ்டாலின் அறிவுரை



"தமிழ்நாட்டு மக்களுக்கும் மிக மிக உண்மையாக இருங்கள். தமிழ்நாட்டுக்கான கோரிக்கைகளை நாடாளுமன்றத்தில் எடுத்து வைத்து வாதாட வேண்டும், போராட வேண்டும். ஏராளமான வாக்குறுதிகளை நாம் மக்கள் மன்றத்தில் வைத்தோம். அவை அனைத்தையும் நாடாளுமன்றத்தில் எடுத்து வைத்து அதனைச் செயல்பட வைக்க வேண்டும். பலவீனமான பா.ஜ.க. அரசை, நம்முடைய முழக்கங்களின் மூலமாக செயல்பட வைக்க வேண்டிய கடமை உங்கள் அனைவருக்கும் இருக்கிறது."

– இவ்வாறு தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தமிழக முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உங்களை எல்லாம் பார்க்கும் போது எனக்கு மிகமிக மகிழ்ச்சியாக இருக்கிறது. நான் மிகமிக மகிழ்ச்சியாக இருக்கிறேன். இன்னும் சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் என்ற முறையில் இன்னும் பெருமையாக இருக்கிறது.

நாற்பதுக்கு நாற்பது என்று சொல்லி பரப்புரைப் பயணத்தை நான் தொடங்கினேன். நாற்பதுக்கு நாற்பது என்ற வெற்றியை அடைந்து விட்டோம். நாற்பதுக்கு நாற்பதுஎன்ற இந்தவெற்றிஎன்பதுசாதாரணமான வெற்றி அல்ல. 2004ஆம் ஆண்டு – இருபது ஆண்டுகளுக்கு முன்னால் கருணாநிதி நமக்குப் பெற்றுத் தந்த வெற்றி இது. அந்த வெற்றியை நாம் பெற்றுள்ளோம்.

இப்போது நாம் அடைந்துள்ள வெற்றிக்கு மிக முக்கியமான சிறப்பு உண்டு. 2019 நாடாளுமன்றத் தேர்தலில் புதுவை உள்ளிட்ட தமிழ்நாட்டில் 39 தொகுதிகளைத்தான் கைப்பற்ற முடிந்தது. ஒரு தொகுதியில் வெற்றி வாய்ப்பை இழந்தோம். இந்த தேர்தலில் அந்த ஒன்றையும் சேர்த்து நாற்பதுக்கு நாற்பது வென்றுவிட்டோம். இரண்டாவது தேர்தலில், முழுமையான வெற்றியைப் பெறுவது என்பது சாதாரணமான சாதனை அல்ல, வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனையாகும்.

இந்தச் சாதனை வரலாற்றில் நீங்களும் இருக்கிறீர்கள் என்பதுதான் உங்களுக்கு உள்ள பெருமை ஆகும். நாடாளுமன்றத்தில் அதிக அனுபவம் கொண்ட டி.ஆ.பாலு முதல் – முதல் முறை எம்.பி.யாகும் பலரும் இங்கு இருக்கிறீர்கள். மிகமிகக் குறைந்த வயதில் அருண் நேரு பெரம்பலூர் எம்.பி.,ஆகி உள்ளார். இப்படி அனைவரும் இருக்கிறீர்கள்.

வெற்றி பெறுபவரே வேட்பாளர் என்ற அடிப்படையில் தான் உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. உங்களுக்கு இத்தகைய பெரிய வாய்ப்பை அளித்த தி.மு.கவுக்கும் உங்களுக்கு வாக்களித்த தமிழ்நாட்டு மக்களுக்கும் மிக மிக உண்மையாக இருங்கள். இதுதான் தி.மு.க. தலைவர் என்ற முறையில் நான் வைக்கும் வேண்டுகோள் ஆகும்.

உங்கள் அனைவருக்கும் நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கொள்கைக் குடும்பத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு டில்லி செல்லும் நீங்கள் – என் பெயரையும் கட்சியின் பெயரையும் காப்பாற்ற வேண்டும். ஒரு சில மாநிலங்களில் தேர்தல் முடிவுகள் லேசாக மாறி இருந்தால் ஒன்றியத்தில் இந்தியா கூட்டணி ஆட்சி அமைத்திருக்கும். அதே நேரத்தில் மிகப்பெரிய பெரும்பான்மையை மட்டுமல்ல – ஆட்சி அமைக்கத் தேவையான அளவுக்கு செல்வாக்கைக்கூட பா.ஜ.க. அடையவில்லை.

370 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் – 400 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்று சொல்லி 240 இற்கு இறங்கி விட்டது பா.ஜ.க. இந்தச் சூழலில் நாம் தமிழ்நாட்டுக்கான கோரிக்கைகளைநாடாளுமன்றத்தில்எடுத்துவைத்து வாதாடவேண்டும்,போராடவேண்டும்.ஏராளமான வாக்குறுதிகளை நாம் மக்கள் மன்றத்தில் வைத்தோம். அவை அனைத்தையும் நாடாளுமன்றத்தில் எடுத்து வைத்து அதனைச் செயல்பட வைக்க வேண்டும். பலவீனமானபா.ஜ.க. அரசை, நம்முடைய முழக்கங்களின் மூலமாக செயல்பட வைக்க வேண்டிய கடமை உங்கள் அனைவருக்கும் இருக்கிறது."– என்றார்.

# உத்தரப் பிரதேசத்தில் 11–15ஆம் திகதி வரை நன்றி யாத்திரையை நடத்த காங்கிரஸ் திட்டம்



உத்தரப் பிரதேசத்தில் 11ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகக வரை நன்றி யாத்திரையை நடத்த காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது.

இதுதொடர்பில் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரும், உத்தரப் பிரதேச பொறுப்பாளருமான அவினாஷ் பாண்டே கருத்து தெரிவிக்கையில்,

"மக்களவை தேர்தல் முடிவுகளை தொகுதிவாரியாக காங்கிரஸ் கட்சியின் அரசியல் விவகாரக் குழு ஆய்வு செய்தது. உத்தர பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சி 17 இடங்களில் போட்டியிட்டு 6 இடங்களில் வென்றது. எங்களின் இண்டியா கூட்டணி மொத்தம் 43 இடங்களில் வென்றது. இந்த ஆய்வு கூட்டத்தில் பெண்கள் உரிமை உட்பட 9 முன்மொழிவுகள் நிறைவேற்றப்பட்டன.

ராகுல் காந்தியின் தேசிய நடை பயணம் மக்களிடையே நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசியல் சாசனத்துக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலுக்கு இடையே, உத்தர பிரதேசத்தில் மக்கள் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றியது பாராட்டத்தக்கது.

உத்தர பிரதேசத்தில் 403 சட்டப் பேரவை தொகுதிகளில் உள்ள மக்களுக்கு நன்றி தெரிவிக்கவும், அவர்களுக்கு காங்கிரஸ் தலைவர்கள் ராகுல் காந்தி மற்றும் பிரியங்கா காந்தி கூறியுள்ள தகவல்களை தெரிவிக்கவும் நன்றி யாத்திரை நடத்த காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது. எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை இந்த நன்றி யாத்திரை நடத்தப்படும்."– என்றார்.



# குழந்தைகளுக்கு எதிராக சட்டங்களை மீறும் படைகளின் பட்டியலில் இஸ்ரேல்

குழந்தைகளுக்கு எதிரா சட்டங்களை மீறும் படைகளின் பட்டியலில் இஸ்ரேல் இராணுவத்தையும் ஐக்கிய நாடுகள் சபை சேர்த்துள்ளது.

அதன்படி, கடந்த ஆண்டு குழந்தைகளை பாதுகாக்க தவறிய குற்றவாளிகள் பட்டியலில் இஸ்ரேல் இராணுவமும் இடம் பெற்றுள்ளதாக தமக்கு தகவல் கிடைத்ததாக ஐக்கிய நாடுகள் சபைக்கான இஸ்ரேல் தூதுவர் கிலாட் எர்டன் அறிவித்துள்ளார்.

இந்த பட்டியல் அடுத்த வாரம் ஐ.நா. பாதுகாப்பு சபையில் சமர்ப்பிக்கப்படும்.

மோதல்களில் குழந்தைகள் கொல்லப்படுவது, உதவி கிடைக்காதது, பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகளை குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

காசா பகுதியில் ஹமாஸ்க்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர், மேலும் ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





# மர்ம நபரின் தாக்குதலுக்கு ஆளானார் டென்மார்க் பிரதமர்

தலைநகர் கோபென்ஹாகென் சென்றிருந்த டென்மார்க் பிரதமர் மேட் ஃப்ரெடெரிக்சன் மர்ம நபர் ஒருவரின் தாக்குதலுக்குள்ளாகியுள்ள சம்பவம் அந்த நாட்டில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தாக்குதலுக்குள்ளான டென்மார் பிரதமர் மேட் ஃப்ரெடெரிக்சன் உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

இதில், பிரதமரின் கழுத்து பகுதியில் சிறு காயம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், பிரதமரை தாக்கியதாகக் கூறப்படும் 39 வயதுடைய மர்ம நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன்போது, தாக்குதல் குறித்து கருத்து தெரிவித்துள்ள பிரதமர் மேட் ஃப்ரெடெரிக்சன், நடந்த சம்பவத்தால் தான் அதிர்ச்சியும், கவலையும் அடைகின்றேன் என தெரிவித்துள்ளார்.

மேலும், தான் தற்போது நலமாக இருப்பதாகவும், தனக்காக குரல் கொடுத்தவர்களுக்கும், ஊக்கமளித்தவர்களுக்கும் நன்றி என குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு டென்மார்க் இன் இளம் வயது பிரதமராக மேட் ஃப்ரெடெரிக்சன் பதவியேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விமான விபத்தில் பலியானார் அமெரிக்க விண்வெளி வீரர்



அமெரிக்கா பிரபல விண்வெளி வீரர் வில்லியம் ஆண்டர்ஸ் தனது 90 ஆவது வயதில் விமான விபத்தில் உயிரிழந்துள்ளார் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வில்லியம் ஆண்டர்ஸ் அப்பல்லோ-8 விண்கலத்தில் சென்று நிலவை சுற்றி வந்த மூன்று நபர்களில் ஒருவராவார்.

அதுமட்டுமன்றி விண்வெளியில் இருந்து எடுக்கப்பட்ட பூமியின் முதல் வர்ணப் புகைப்படமான எர்த்ரைஸ் புகைப்படத்தை இவரே எடுத்துள்ளார்.

இந்த நிலையில் வில்லியம் ஆண்டர்ஸ், தனக்கு சொந்தமான ஒரு சிறிய ரக விமானத்தை தனியாக இயக்கிகொண்டு வொஷிங்டனில் இருந்து புறப்பட்டபோது பிரிட்டிஷ் கொலம்பியாவின் தீவுகளுக்கு இடையே ஜோன்ஸ் தீவில் உள்ள கடலில் விமானம் விழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த பத்தில் வில்லியம் ஆண்டர்ஸ் உயிரிழந்துள்ளார் என கூறப்படும் நிலையில் அவரது உடலை மீட்கும் பணி நடந்து வருவதாக கூறப்படுகிறது.

பக்கங்கள் 04

# கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 09/06/2024


## யோர்க் சூட்டுச் சம்பவம் பொலிஸார் விசாரணை

ஒன்ராரியோ, ஜூன் 09
சனிக்கிழமை நண்பகலில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் யோர்க் பிராந்திய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

C2



# புது மெருகுடன் மொன்ரியல் நகர மண்டபம் நேரில் கண்டுரசிக்கத் திரளும் மக்கள் கூட்டம்

**கியூபெக், ஜூன் 09**
**வரலாற்று சிறப்புமிக்க மொன்ரியல் நகர மண்டபக் கட்டடம் நீண்டகால மற்றும் விலையுயர்ந்த புனரமைப்பைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு மீண்டும் திறக்கப்பட்டதால், மாண்ட்ரீல் குடியிருப்பாளர்கள் ஐந்தாண்டுகளில் முதல் முறையாக மாநகர கட்டடத்திற்குத் திரும்பினர்.**

2019இல் தொடங்கிய 211 மில்லியன் டொலர்கள் மேம்படுத்தலைக் காணும் வாய்ப்பிற்காக பார்வையாளர்களின் நீண்ட வரிசைகள் புதுப்பிக்கப்பட்ட பாரம்பரியக் கட்டடத்தைச் சுற்றிக் காத்திருந்தனர்.

நேற்று சனிக்கிழமையன்று ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் புதுப்பிக்கப்பட்ட கட்டடத்தை பார்வையிடுவார்கள் என்று தான் எதிர்பார்க்கின்றார் என்று நகர ஆலோசகர் எரிக்கா அல்னியஸ் கூறியிருந்தார்.

# கனடியத் தமிழர் பேரவை சீர்திருத்தம்: விவரங்களை வெளியிடக் காலக்கெடு

### ஜூன் 18 வரை என்கிறது கனடியத் தமிழர் கூட்டு

ஒன்ராரியோ, ஜூன் 09
கனடியத் தமிழர் பேரவையை சீர்திருத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையின் விவரங்களை வெளியிட ஜூன் 18ஆம் திகதி வரை கனடியத் தமிழர் கூட்டினால் காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது.

ஜூன் 7ஆம் திகதி இணைய வழியாக நடைபெற்ற மெய்நிகர் சமூகக் கூட்டத்தில் கனேடிய தமிழர் கூட்டு இந்த தகவலை வெளியிட்டது.

கடந்த மே மாதம் 14ஆம் திகதி பேரவைக்கு இந்த காலக்கெடுவை முன்வைத்து முறையான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக கூட்டின் சார்பில் சட்டத்தரணி அபிமன்யு சிங்கம் தெரிவித்தார்.

C2

CANADIAN TAMIL COLLECTIVE
கனேடியத் தமிழர் கூட்டு

தமது செயற்பாடுகள், எதிர்காலத் திட்டங்கள் குறித்து சமூகத்திற்கு விளக்கமளிக்கும் மெய்நிகர் சமூகக் கூட்டம் ஒன்றை கனேடியத் தமிழர் கூட்டு நடத்தியிருந்தது.

இந்தக் கூட்டத்தில் இமாலயப் பிரகடனம், தமிழ் இனப்படுகொலை கோட்பாடு, உலகத் தமிழர் பேரவையில் இருந்து விலகல், அமைப்புசார் மறுசீரமைப்பு, தெருவிழா முன்னெடுப்பு ஆகியன தொடர்பான கனடியத் தமிழர் பேரவையின் நிலைப்பாடுகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

பொதுமக்கள், ஊடகத்தினர், சமூகக் கரிசனையாளர்கள் பலரும் கலந்துகொண்ட இந்த மெய்நிகர் சமூகக் கூட்டத்தில் கேள்வி - பதில் பகுதியும் நிகழ்ந்தது.




# இந்திரா காந்தி கொல்லப்பட்டமை சம்பந்தமான போஸ்டர்கள் கனடாவில் ஒட்டப்பட்டமையால் பீதி

## காலிஸ்தான் பிரிவினைவாதிகளின் நடவடிக்கை என விசனம்



முன்னாள் இந்தியப் பிரதமரான இந்திரா காந்தி கொல்லப்பட்டமை தொடர்பான போஸ்டர்களை வெளியிட்டு, காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பினர், கனடாவில் வாழும் இந்திய வம்சாவளியினருக்கு அச்சத்தை ஏற்படுத்த முயல்கின்றனர் இந்திய வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.

கனடாவின் வான்கூவரில், காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பின் ஆதரவாளர்கள், முன்னாள் இந்தியப் பிரதமரான இந்திரா காந்தி கொல்லப்பட்டமை தொடர்பான போஸ்டர்களை ஒட்டியுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அது குறித்து கருத்து தெரிவித்துள்ள பொது பாதுகாப்பு அமைச்சரான Dominic LeBlanc, வன்முறையைத் தூண்டுதல் கனடாவில் ஏற்றுகொள்ள இயலாதது என்று கூறியுள்ளார்.

அத்துடன், இந்திய வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினரான சந்திரா ஆர்யாவும் இந்தப் போஸ்டர்கள் தொடர்பில் கவலை தெரிவித்துள்ளார்.

காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பின் ஆதரவாளர்கள் வெளியிட்டுள்ள அந்த போஸ்டர்கள் கனடாவில் வாழும் இந்து கனேடியர்களுக்கு வன்முறை குறித்த அச்சத்தை உருவாக்கும் முயற்சி என்று கூறியுள்ளார் அவர்.

# சடலங்களாக வயோதிப ஜோடி; மரணங்கள் குறித்துச் சந்தேகம்

கியூபெக், ஜூன் 09

80 வயதை எட்டிய ஒரு ஆணும் பெண்ணும் லவால் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், சந்தேகத்திற்கிடமான மரணம் குறித்து மொன்ரியல் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் குடும்ப உறுப்பினர் ஒருவரிடமிருந்து அழைப்பு வந்ததாகவும், பிற்பகல் 2:20 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உடல்களில் கத்தி அல்லது துப்பாக்கி காயங்கள் எதுவும் காணப்படவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த மரணங்களை சந்தேகத்திற்குரியனவாகக் கருதுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மரணத்திற்கான காரணத்தை கண்டறிய பிரேத பரிசோதனைகள் எதிர்வரும் நாள்களில் நடைபெறவுள்ளன.

## யோர்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

30 வயதுடைய நபர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் உள்ளூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டமையைத் தொடர்ந்தே சம்பவம் குறித்து அறியக் கிடைத்ததாக பொலிஸார் கூறியுள்ளனர்.

எனினும், பாதிக்கப்பட்டவருக்கு உயிருக்கு ஆபத்தான காயங்கள் எதுவும் இல்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் தகவல் தெரிந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.





# பலஸ்தீன ஆதரவுப் போராட்டத்தில் ஆக்ரோஷமாக நடந்த நால்வர் கைது


## டொரன்டோ டவுன்டவுன் பகுதியில் சம்பவம்

ஒன்ராரியோ, ஜூன் 09

டொரன்டோ டவுன்டவுன் பகுதியில் பலஸ்தீன ஆதரவுப் போராட்டத்தில் தவறாக நடந்து கொண்டமைக்காக நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாரிய கொடியொன்றில் மறைத்துக் கொண்டு வீதியில் வரைவதற்கு போராட்டக்காரர்கள் முயற்சித்தனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவர்களைத் தடுப்பதற்கு பொலிஸார் முயற்சித்த போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆக்ரோஷத்துடன் நடந்து கொண்டனர் எனவும், பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தனர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.இதனையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் பொலிஸாருடன் ஆக்ரோஷமாக நடந்து கொண்ட நால்வர் கைது செய்ப்பட்டனர் எனொ பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.





# மனித கடத்தல் குற்றச்சாட்டு டொரன்ரோவில் 2 பேர் கைது

ஒன்ராரியோ, ஜூன் 09

2013ஆம் ஆண்டு முதல் மனித கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் நடத்தப்பட்ட விசாரணையின் ஒரு பகுதியாக டொரன்ரோவில் இரண்டு நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

டொராண்டோ பொலிஸ் சேவையின் புலனாய்வாளர்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் குற்றச்சாட்டுகள் தொடர்பாக முதலில் விசாரணையை ஆரம்பித்தனர் என்று பொலிஸார் ஜூன் 8ஆம் திகதி வெளியிட்ட செய்தி வெளியீட்டில் தெரிவித்துள்ளனர்.

அந்த விசாரணையின் மூலம், பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் 'ஏமாற்றுதல், வற்புறுத்தல் மற்றும் கட்டுப்பாடு' ஆகியவற்றின் மூலம் கடத்தல் செய்துள்ளார் என்பதை அறிந்தனர் எனொ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் விக்டோரியா பார்க் அவென்யூ மற்றும் டான்ஃபோர்ட் அவென்யூ பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பை மனித கடத்தலுக்கு பயன்படுத்தினர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# பொலிஸாரின் படகுடன் மோதி பெண்ணொருவர் உயிரிழந்தார்

## சட்பெரி நகரின் நெப்வாசி ஏரியில் சம்பவம்




ஒன்ராரியோ, ஜூன் 09

ஒன்ராரியோவின் வடக்குப் பகுதியில் பொலிஸாரின் படகுடன் மோதியதால் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சட்பெரி நகரில் நெப்வாசி ஏரியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஒன்ராரியோ பொலிஸார் செலுத்திச் சென்ற படகுடன், குறித்த பெண் செலுத்தி வந்த படகு மோதியதால் விபத்து இடம்பெற்றுள்ளது.

எனினும், சம்பவத்தில் உயிரிழந்த பெண் குறித்த விவ ரங்கள் இதுவரை வெளியாகவில்லை.

# இனவாதம், பாரட்பசத்திற்கு எதிரான மூலோபாயத்திற்கு 11 கோடி டொலர்



ஒன்ராரியோ, ஜூன் 09

இனவாதம் மற்றும் பாரட்பசத்திற்கு எதிரான மூலோபாயத்திற்காக 110.4 மில்லியன் டொலர்களை மத்திய அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

பல்வகைத்தன்மை, உள்ளடக்கம் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான அமைச்சர் கமல் கேராவினால் ஜூன் 8ஆம் திகதி இது குறித்து அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்த நிதியானது நூற்றுக்கணக் கான திட்டங்களின் ஊடாக, ஆயிரக் கணக்கான கனேடியர்களின் வாழ்க் கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என அமைச்சர் கமல் கேரா குறிப் பிட்டுள்ளார்.

கட்டமைப்புக்களை மாற்றி வாழ்க் கையை மாற்றல் எனப் பெயரிடப்பட்ட இந்த புதிய திட்டமானது, 2024ஆம் ஆண்டு முதல் 2028ஆம் வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த நிதியில் 70 மில்லியன் டொலர்கள் வரை உள்ளூர் செயற் பாடுகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளன.

# கடல்விமானம் படகுடன் மோதியதில் பலர் காயம்



பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூன்09

வான்கூவரின் நிலக்கரி துறை முகத்தில் கடல்விமானம் ஒன்று படகில் மோதியதால் பலர் காயம டைந்துள்ளனர்.

ஸ்டென்லி பார்க்கில் புரொக்டன் பொயின்ட்டில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. குறித்த கடல்விமானம் விழுந்த பகுதியில் மீட்புப் படையினர் தொடர்ந்து மீட்புப் பணிகளில் ஈடுபட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இந்த சம்பவத்தில் எத்த னைப் பேர் காயம டைந்துள்ளனர் என்பது குறித்த விபரங்களை பொலி ஸார் வெளியிடவில்லை.